


# எண்கள்

## 2.1 எண் தொடர் 10,000 வரை

தீபாவளி காலங்களில் ஏற்படும் பயணிகளின் கூட்ட நெரிசலை சமாளிக்க, நவம்பர் 3 முதல் 5 வரை 10,000 சிறப்பு பேருந்துகள் கூடுதலாக இயக்கப்படும் என வியாழன் அன்று போக்குவரத்து துறை அறிவித்தது. 9,967 சிறப்பு பேருந்துகளில், 6,367 பேருந்துகள் சென்னையிலிருந்து மற்ற மாவட்டங்களுக்கும், 3,600 பேருந்துகள் மாவட்டத்திற்குள்ளும் இயக்கப்படும்.

கீழ்க்காணும் வினாக்களைப் பற்றி கலந்துரையாடுவோம்.

XJXG9R

எதைப் பற்றிய செய்தி இது?

மேற்குறிப்பிட்ட செய்தி தெரிவிப்பது என்ன?

பண்டிகையைப் பற்றிய சிறப்பு என்ன?

உங்களில் எத்தனை பேர் உங்களது உறவினர் வீடுகளுக்கு செல்வீர்கள்?

பண்டிகை காலங்களில் உங்களில் எத்தனை பேர் வேறொரு இடத்திற்கு பயணம் செய்வீர்கள்?

இந்த எண்கள் நமக்கு என்ன தெரிவிக்கிறது?

நீங்கள் முதல் வகுப்பில், 20 வரையுள்ள எண்களின் பெயர்களை கற்றுள்ளீர்கள். தற்போது மிகப்பெரிய எண்களின் பெயர்களை கற்போம். 1 முதல் 20 வரையும் மேலும் 30, 40, 50, 60, 70, 80, 90 மற்றும் 100 வரை எண்களின் பெயர்களை நீங்கள் ஏற்கனவே கற்றுள்ளீர்கள். பெரிய எண்களின் பெயர்களை எவ்வாறு குறிப்பிடுவோம்? பின்வரும் எடுத்துக்காட்டினை கொண்டு கலந்துரையாடுவோம்.

**எடுத்துக்காட்டு**

1283 ஐ எழுத்தால் எழுது.

**தீர்வு**

முதலில் கொடுக்கப்பட்ட எண்ணின் விரிவாக்கம் செய்வோம். அவற்றின் எண் பெயர்களை ஒவ்வொன்றின் கீழேயும் எழுதி அவற்றை சேர்த்து கொடுக்கப்பட்டுள்ள எண்ணின் என் பெயர் காண்போம்.

1283 = 1000 + 200 + 80 + 3

**= ஓர் ஆயிரம் + இருநூறு + எண்பது + மூன்று**

எனவே 1283 என்ற எண்ணின் எண் பெயர் ஆயிரத்து இருநூற்று எண்பத்து மூன்று.

## பயிற்சி 2.1

**அ. கீழே கொடுக்கப்பட்டுள்ள எண்களின் பெயர்களை எழுதுக.**

i. 1006 – ______________

ii. 6327 – ______________

iii. 9097 – ______________

iv. 10,000 – ______________

v. 8906 – ______________

**ஆ. கீழே கொடுக்கப்பட்டுள்ள எண்பெயருக்கேற்ற எண்ணுருவை எழுதுக.**

i. ஏழாயிரத்து அறுபத்து நான்கு – _______

ii. ஒன்பதாயிரத்து முந்நூற்று நாற்பது – _______

iii. ஐந்தாயிரத்து அறுநூற்று எழுபத்து மூன்று – ______

iv. பத்தாயிரம் – _______

v. நான்காயிரத்து முந்நூற்று ஆறு – _______

**இ. கீழே கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு விடையளி?**

i. ராமு வங்கிக்கு சென்று ₹ 7,500 ஐ முதலீடு செய்தார். முதலீட்டு படிவத்தில் முதலீட்டு பணத்தினை அவர் நிரப்ப வேண்டும். முதலீடு செய்யவேண்டிய தொகையினை எண் பெயரால் குறிப்பிட வேண்டும். படிவத்தை நிரப்ப அவருக்கு எண் பெயர் எழுதி உதவலாமா?

ii. மிகப்பெரிய ஈரிலக்க எண்ணையும் மிகப்பெரிய மூவிலக்க எண்ணையும் கூட்ட கிடைக்கும் எண்ணின் எண் பெயரை எழுதுக.

## 2.1.1 ஒற்றை எண்கள் மற்றும் இரட்டை எண்கள்

எண்களை ஒற்றை எண்கள் என்றும் இரட்டை எண்கள் என்றும் இரட்டை எண்கள் என்றும் எவ்வாறு வகைப்படுத்துவீர்?

**ஒற்றை எண்கள்**

ஒன்றாம் இடத்தில் 1,3,5,7 மற்றும் 9 ஆகிய எண்களை கொண்டு முடியும் எண்கள் **ஒற்றை எண்களாகும்.**

**எடுத்துக்காட்டு**

1001, 1003, 1005, 1007, 1009

2371, 4863, 5605, 3787, 1239

**இரட்டை எண்கள்**

எண்களின் முடிவில் 0,2,4,6 மற்றும் 8 ஆகிய எண்களை கொண்டு முடியும் எண்கள் **இரட்டை எண்களாகும்.**

**எடுத்துக்காட்டு**

2002, 2004, 2006, 2008, 9960



4th_Unit_02_Numbers_Term 1-TM.indd 21 26-02-2020 01:32:24 PM

**குறிப்பு:**

கொடுக்கப்பட்ட எண் ஒற்றை எண்ணா அல்லது இரட்டை எண்ணா என கண்டறிய அவ்வெண்ணின் ஒன்றாம் இடமதிப்பைப் ஆராய்தல் போதுமானது.

## செயல்பாடு

கட்டத்தில் உள்ள ஒற்றை எண்களை வட்டமிட்டு அவற்றின் எண் பெயர்களை கீழேக் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் எழுதுக.

4132 8841 7483

2973 1045

8123 5667 4646

6566 3990 3132

| வ.எண் | எண் | எண் பெயர் |
|---|---|---|
| 1. | 8123 | எட்டாயிரத்து நூற்று இருபத்து மூன்று |

## பயிற்சி 2. 2

**அ.** **கீழே கொடுக்கப்பட்டுள்ள எண்களில் ஒற்றை எண்களை வட்டமிடுக.**

9001, 8002, 7603, 6542, 4875, 3882, 3217.

**ஆ.** **கீழே கொடுக்கப்பட்டுள்ள எண்களில் இரட்டை எண்களை வட்டமிடுக.**

6231, 5920, 4812, 2121, 1234, 9528, 3946.



4th_Unit_02_Numbers_Term 1-TM.indd 22 26-02-2020 01:32:25 PM

**இ.** **கீழேக் கொடுக்கப்பட்டுள்ள எண்களில் இரட்டை எண்களை தேர்ந்தெடுத்து அவ்வெண்களையும் அவற்றின் எண் பெயரைகளையும் எழுதுக.**

i. 6501 ii. 4706 iii. 3999 iv. 4001 v. 3848

| எண் | எண் பெயர் |
|---|---|
| | |

**ஈ.** **கீழே கொடுக்கப்பட்டுள்ள எண்களில் ஒற்றை எண்களை தேர்ந்தெடுத்து அவ்வெண்களையும் அவற்றின் எண் பெயர்களையும் எழுதுக.**

i. 4703 ii. 3206 iii. 2003 iv. 4017 v. 2001

| எண் | எண்ணின் பெயர் |
|---|---|
| | |

## 2.1.2 பெரிய எண்களின் விரிவாக்க வடிவம்

534 என்ற எண்ணை 500 + 30 + 4 என விரிவாக்கம் செய்யலாம்.

இவ்வெண்னை ஐந்நூற்று முப்பத்து நான்கு என நாம் வாசிக்கலாம்.

இதேபோன்று,

2936 = 2000 + 900 + 30 + 6 = இரண்டாயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்து ஆறு

ஓர் எண்ணின் விரிவான வடிவத்திலுள்ள இலக்கங்கள் அவ்வெண்ணில் உள்ள இலக்கங்களின் இடமதிப்பினை நமக்கு தெரிவிக்கின்றன.



4th_Unit_02_Numbers_Term 1-TM.indd 23 26-02-2020 01:32:25 PM

**5269 என்ற எண்ணில்**

5 ன் இடமதிப்பு 5000 (ஐந்தாயிரம்)

2 ன் இடமதிப்பு 200 (இருநூறு)

6 ன் இடமதிப்பு 60 (அறுபது)

9 ன் இடமதிப்பு 9 (ஒன்பது)

ஓர் எண்ணிலுள்ள இலக்கத்தின் இடமதிப்பு என்பது அந்த எண்ணில் அவ்விலக்கம் அமைந்திருக்கும் இடத்தை கொண்டு மதிப்பிடப்படுகிறது. 5 என்ற எண்ணின் இடமதிப்பு ஆயிரமாகும். எனவே, இதன் மதிப்பானது 5000 இதுவே நூறாம் இடத்தில் இருந்தால் இதன் மதிப்பு 500 ஆகும்.

**ஓர் இலக்கத்தின் முகமதிப்பு என்பது அந்த இலக்கம் ஓர் எண்ணில் எந்த இடத்தில் இருந்தாலும் அந்த இலக்கமே ஆகும். முகமதிப்பு இடமதிப்பை பொறுத்து மாறுபடுவதில்லை. ஆனால் இடமதிப்பானது அந்த இலக்கத்தின் இடத்தைப் பொறுத்து மாறுபடும்.**

ஓர் இலக்கத்தின் இடமதிப்பு = அவ்விலக்கத்தின் முகமதிப்பு × அவ்விலக்கம் உள்ள இடத்தின் மதிப்பு

## எடுத்துக்காட்டு

2745 என்ற எண்ணில்

5 ன் இடமதிப்பு = 5 × 1 = 5 ஒன்றுகள், 5ன் முகமதிப்பு **5** ஆகும்.

4 ன் இடமதிப்பு = 4 × 10 = 40 = 4 பத்துகள், 4ன் முகமதிப்பு **4** ஆகும்.

7ன் இடமதிப்பு = 7 × 100 = 700 = 7 நூறுகள், 7ன் முகமதிப்பு **7** ஆகும்.

2 ன் இடமதிப்பு = 2 × 1000 = 2000 = 2 ஆயிரங்கள், 2ன் முகமதிப்பு **2** ஆகும்.

## பயிற்சி 2.3

**அ.** கொடுக்கப்பட்டுள்ள எண்களில் வண்ணமிடப்பட்ட இலக்கங்களின் முகமதிப்பையும் இடமதிப்பையும் காண்க.

i. 1379  ii. 9876  iii. 5136  iv. 8965

iv. 2010  v. 4038



4th_Unit_02_Numbers_Term 1-TM.indd 24 26-02-2020 01:32:25 PM

**ஆ.** கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையை நிறைவு செய்க.

| | | |
|---|---|---|
| i. | 6785 | |
| ii. | | 4000 + 200 + 90 + 6 |
| iii. | | 3000 + 300 + 20 + 7 |
| iv. | 9999 | |
| v. | | 5000 + 70 + 1 |
| vi. | 2934 | |

**இவற்றை முயல்க**

**நான் யார்?**

i பத்தாம் இடத்தில் 7

ii ஆயிரமாவது இடத்தில் 4ல் 10 குறைவாக

iii 3 மற்றும் 5 க்கு இடையில் நூறாம் இடம்

iv ஒன்றாம் இடத்தில் 2 ஆனது 6 ஐ விட அதிகம்.

**இ.** சரியானவற்றை வட்டமிடுக.

| | | |
|---|---|---|
| i. | 5 ஆயிரங்கள் + 3 நூறுகள் + 2 ஒன்றுகள் | 5320, 5302 |
| ii. | 3758 ல் 5 இன் இடமதிப்பு | 50, 500 |
| iii. | மூன்றாயிரத்து அறுநூற்று அறுபது | 3060, 3660 |
| iv. | 4000 + 600 + 90 | 4690, 4609 |

**செயல்பாடு**

**வழிமுறை:**

1. வகுப்பை 5 குழுவாக பிரிக்க.
2. 1 முதல் 9 வரையுள்ள எண் அட்டைகளைப் பயன்படுத்தி ஒரு எண்ணை உருவாக்குக.
3. அந்த எண்ணின் எண் பெயர் எழுதுக.
4. அதன் விரிவாக்க வடிவத்தை எழுதுக.
5. ஒவ்வொரு இலக்கத்தின் இடமதிப்பை எழுது.



4th_Unit_02_Numbers_Term 1-TM.indd 25 26-02-2020 01:32:25 PM

## 2.2 எண்களை ஒப்பிடுதல்

**எண்களை வரிசைப்படுத்துதல்**

### 2.2.1 எண் தொடர்கள் மற்றும் வகைப்படுத்தப்படாத எண் வரிசை எண்களை ஏறுவரிசை மற்றும் இறங்கு வரிசையில் எழுதுதல்.

**ஏறுவரிசை**

மிகச்சிறிய எண்ணிலிருந்து மிகப்பெரிய எண்கள் வரை எண்களை வரிசைப்படுத்தி எழுதுவது ஏறுவரிசை ஆகும்.

**எடுத்துக்காட்டு**

4278 4875 4923 4717

இங்கு ஆயிரமாவது இடத்தில் உள்ள அனைத்து எண்களும் சமம் எனவே நாம் நூறாவது இடத்தில் உள்ள இலக்கங்களை ஒப்பிடுவோம்.

4278 < 4717 < 4875 < 4923.

4278, 4717, 4875, 4923. இதுவே இவ்வெண்களின் ஏறுவரிசை ஆகும்

**இறங்கு வரிசை**

இறங்கு வரிசை என்பது மிகப்பெரிய எண்ணிலிருந்து மிகச்சிறிய எண்வரை எண்களை வரிசைப்படுத்தி எழுதுவது ஆகும்.

**எடுத்துக்காட்டு**

5234, 6271, 4234, 5172, 4871

மிகப்பெரிய எண்ணிலிருந்து மிகச்சிறிய எண் வரை எண்களை வரிசை படுத்தி எழுதுவது இறங்குவரிசை ஆகும்.

6271 > 5234 > 5172 > 4871 > 4234

6271, 5234, 5172, 4871, 4234. இதுவே இவ்வெண்களின் இறங்குவரிசை ஆகும்.

**உங்களுக்குத் தெரியுமா?**

ஏறு வரிசையின் தலை கீழ் இறங்கு வரிசையாகும்.

## பயிற்சி 2. 4

**அ.** பின்வரும் எண்களை ஏறுவரிசையில் எழுதுக.

i. 7631, 9987, 7634, 5436, 8918

ii. 4096, 3096, 3099, 2473, 3172

iii. 5201, 5627, 4325, 9999, 9801

**ஆ.** பின்வரும் எண்களை இறங்குவரிசையில் எழுதுக.

i. 3435, 3670, 139, 3267, 6544.

ii. 2785, 3605, 2782, 236, 9801.

iii. 6998, 6987, 6898, 7801, 8979.

**இ.** மையில்கற்களை ஏறுவரிசையிலும் இறங்குவரிசையிலும் வரிசைப்படுத்துக.



(a) 495 கிமீ (b) 0 கிமீ (c) 2650 கிமீ (d) 1680 கிமீ (e) 1420 கிமீ



### செயல்பாடு

1. உனது பள்ளியில் உள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கையை வகுப்புவாரியாக எழுதுக. அதை ஏறுவரிசையிலும் இறங்கு வரிசையிலும் எழுதுக.

2.

| துவங்கும் இடம் | இலக்கு | தொலைவு (தோராயமாக கிமீ) |
|---|---|---|
| சென்னை | பாண்டிச்சேரி | 132 |
| சென்னை | ஹைதராபாத் | 511 |
| சென்னை | கொல்கத்தா | 1363 |
| சென்னை | டெல்லி | 1757 |
| சென்னை | மும்பை | 1025 |
| சென்னை | குவாஹாத்தி | 1891 |

**அட்டவனையை பார்த்து பின்வரும் வினாகக்களுக்கு விடையளி.**

அ) தொலைவினை பொருத்து கொடுக்கப்பட்டுள்ள இடங்களை ஏறுவரிசையில் எழுதுக?

ஆ) தொலைவினை பொருத்து கொடுக்கப்பட்டுள்ள இடங்களை இறங்கு வரிசையில் எழுதுக?

இ) பின்வரும் இடங்களில் சென்னையிலிருந்து மிகக் குறைந்த தொலைவில் உள்ள இடம் எது

i. மும்பை ii. கௌஹாட்டி iii. ஹைதராபாத்?

ஈ) பின்வரும் இடங்களில் சென்னையிலிருந்து மிக அதிக தொலைவில் உள்ள இடம் எது

i. கொல்கத்தா ii. மும்பை iii. பாண்டிச்சேரி?

உ) சென்னையில் இருந்து மிக அதிக தொலைவிலுள்ள இடம் ________ ஆகும்

## 2.2.2 கொடுக்கப்பட்ட இலக்கங்களை கொண்டு மிகச் சிறிய மற்றும் மிகப்பெரிய எண்களாக உருவாக்குதல்.

1. கொடுக்கப்பட்ட எண்களை ஒரே ஒரு முறை மட்டும் பயன்படுத்தி மிகச் சிறிய எண்ணை எழுதுதல்

அ) கொடுக்கப்பட்ட எண்களின் எந்த எண்ணும் பூஜ்ஜியமாக இல்லை எனில், அந்த எண்களின் இலக்கங்களை ஏறுவரிசையில் வரிசைப்படுத்தினால் மிகச்சிறிய எண் உருவாகும்.

**எடுத்துக்காட்டு**

4,2,9 மற்றும் 7 ஆகிய இலக்கங்களை கொண்ட மிகச்சிறிய 4 இலக்க எண் **2479** ஆகும்.



4th_Unit_02_Numbers_Term 1-TM.indd 28 26-02-2020 01:32:25 PM

ஆ) ஒரே ஒரு இலக்கம் பூஜ்ஜியம் எனில் நாம் இலக்கங்களை ஏறுவரிசையில் வரிசைப்படுத்திய பின் மேலும் பூஜ்ஜியத்தை இடமிருந்து வலமாக இரண்டாமிடத்தில் இடும்போது மிகச்சிறிய எண் கிடைக்கும்.

**எடுத்துக்காட்டு**

1,7,5,0 ஆகிய இலக்கங்களைக் கொண்ட மிகச்சிறிய 4 இலக்க எண் **1057**

2. கொடுக்கப்பட்ட இலக்கங்களை ஒரே ஒரு தடவை பயன்படுத்தி மிகப்பெரிய எண்ணை எழுதுவதற்கு இலக்கங்களை இறங்கு வரிசையில் வரிசைப்படுத்த வேண்டும்.

**எடுத்துக்காட்டு**

5, 1, 7 மற்றும் 9 ஆகிய இலக்கங்களைக் கொண்ட மிகப் பெரிய 4 இலக்க எண் **9751**

## பயிற்சி 2. 5

**அ.** கொடுக்கப்பட்டுள்ள இலக்கங்களை ஒரு முறை மட்டும் பயன்படுத்தி மிகப்பெரிய மற்றும் மிகச்சிறிய எண்களை உருவாக்குக.

| | இலக்கங்கள் | மிகப்பெரிய எண் | மிகச்சிறிய எண் |
|---|---|---|---|
| i | 1, 4, 3, 7 | | |
| ii | 5, 0, 9, 3 | | |
| iii | 6, 7, 1, 5 | | |
| iv | 3, 2, 0, 9 | | |
| v | 7, 3, 2, 8 | | |
| vi | 4, 6, 0, 2 | | |
| vii | 9, 1, 4, 0 | | |



4th_Unit_02_Numbers_Term 1-TM.indd 29 26-02-2020 01:32:25 PM

**ஆ.** மிகச் சிறிய எண்ணை வட்டமிடுக ◯ மற்றும் மிகப்பெரிய எண்ணை (✓) குறியிடுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| i. | 2715, | 2175, | 2517, | 2157, | 2275 |
| ii. | 6238, | 2386, | 3862, | 8623, | 9378 |
| iii. | 9345, | 9646, | 3408, | 1425, | 2000 |
| iv. | 5931, | 1370, | 4000, | 2000, | 3000 |
| v. | 6000, | 7000, | 5000, | 4000, | 9000 |
| vi. | 2468, | 4279, | 5090, | 7906, | 6270 |
| vii. | 7692, | 8296, | 3241, | 9276, | 4291 |

## 2.3 கூட்டலும் கழித்தலும்

### எடுத்துக்காட்டு









1232 மாணவர்கள் மிதிவண்டி மூலமும், 2430 மாணவர்கள் பேருந்திலும் 1235 மாணவர்கள் நடந்தும் பள்ளிக்கு வருகின்றனர் எனில் பள்ளியில் உள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு?

| | | |
|---|---|---|
| மிதிவண்டியில் பள்ளி வரும் மாணவர்களின் எண்ணிக்கை | = | 1 2 3 2 |
| பேருந்தில் பள்ளி வரும் மாணவர்களின் எண்ணிக்கை | = | 2 4 3 0 |
| பள்ளிக்கு நடந்து வரும் மாணவர்களின் எண்ணிக்கை | = | (+) 1 2 3 5 |
| மொத்த மாணவர்களின் எண்ணிக்கை | = | 4 8 9 7 |

## பயிற்சி 2.6

**அ.** விடுபட்ட கட்டங்களை நிறைவு செய்க.

i 4634 + ☐ = 4634

ii 2134 + 1 = ☐

iii 5349 + 0 = ☐

iv 1435 + 1923 = 1923 + ☐

v 3457 + ☐ = 3458

**ஆ.** கூட்டுக

i.

| | ஆ | நூ | ப | ஒ |
|---|---|---|---|---|
| | 3 | 2 | 5 | 4 |
| + | 1 | 4 | 2 | 4 |
| | | | | |

ii.

| | ஆ | நூ | ப | ஒ |
|---|---|---|---|---|
| | 2 | 1 | 3 | 5 |
| + | 3 | 3 | 4 | 2 |
| | | | | |

iii.

| | ஆ | நூ | ப | ஒ |
|---|---|---|---|---|
| | 3 | 7 | 6 | 2 |
| + | 3 | 1 | 3 | 7 |
| | | | | |

iv.

| | ஆ | நூ | ப | ஒ |
|---|---|---|---|---|
| | 1 | 4 | 3 | 3 |
| + | 4 | 5 | 5 | 2 |
| | | | | |

**இ.** கூட்டுக: 2713 + 104 + 1172 + 6010

**ஈ.** ₹2500 க்கு ஒரு மெத்தையையும் ₹3500 க்கு உணவருந்தும் மேசையையும் ₹4200 நாற்காலிகளும் ஒருவர் வாங்கினார் எனில் அவர் கடைக்காரருக்கு செலுத்த வேண்டிய மொத்த தொகை எவ்வளவு?

**உ.** கீழே உள்ள கூட்டல் கூற்றுக்கு தகுந்த வார்த்தை கணக்குகளை உருவாக்குக .

i. 3094 + 7923 = 11,017 ii. 8309 = 2309 + ☐



4th_Unit_02_Numbers_Term 1-TM.indd 31 26-02-2020 01:32:26 PM

**ஊ.** கொடுக்கப்பட்டுள்ள படத்தைக் கொண்டு கூட்டல் கணக்கு கதைகளை உருவாக்குக.

i




______________________________

______________________________

______________________________

______________________________

ii.

| 2017 மற்றும் 2018 க்கு இடைப்பட்ட ஆண்டுகளில் குழந்தை பிறப்பு | | |
|---|---|---|
| மாவட்டம் | | குழந்தைகள் எண்ணிக்கை |
| திருச்சி | நகரம் | 1032 |
| | கிராமம் | 2030 |
| அரியலூர் | நகரம் | 1205 |
| | கிராமம் | 4097 |
| காஞ்சிபுரம் | நகரம் | 2104 |
| | கிராமம் | 4034 |
| சென்னை | நகரம் | 1430 |
| | கிராமம் | 1023 |

______________________________


______________________________

______________________________

______________________________

**எ.** ஒரு நேர்கோட்டில் கூடுதல் 5000 வருமாறு 1400, 1500, 1600, 1700, 1800 மற்றும் 1900 ஆகிய எண்களைக் கொண்டு வட்டங்களை நிறைவு செய்க.

AGJAYM






4th_Unit_02_Numbers_Term 1-TM.indd 32 26-02-2020 01:32:26 PM

ஏ. தகுந்த எண்களைக் கொண்டு கட்டங்களை நிரப்புக

2051 → 1732, ?

## 2.3.1 இன மாற்றத்துடன் 4 இலக்க எண்களை கூட்டுதல்

### எடுத்துக்காட்டு

1. 1957, 2376 மற்றும் 4697ன் கூடுதலைக் காண்க.

| | ஆ | நூ | ப | ஒ |
|---|---|---|---|---|
| | 2 | 2 | 2 | |
| | 1 | 9 | 5 | 7 |
| + | 2 | 3 | 7 | 6 |
| | 4 | 6 | 9 | 7 |
| கூடுதல் = | 9 | 0 | 3 | 0 |



### செயல்பாடு

விடுபட்ட எண்களை எழுதுக.

(i)

| ஆ | நூ | ப | ஒ |
|---|---|---|---|
| 2 | 1 | 7 | 3 |
| △ | 2 | 3 | △ |
| 1 | 9 | △ | 7 |
| 8 | 3 | 7 | 4 |

(ii)

| ஆ | நூ | ப | ஒ |
|---|---|---|---|
| 3 | 9 | 7 | △ |
| 2 | △ | 4 | 4 |
| △ | 7 | △ | 1 |
| 9 | 2 | 7 | 6 |



4th_Unit_02_Numbers_Term 1-TM.indd 33 26-02-2020 01:32:26 PM

## பயிற்சி 2.7

**அ.** பின்வரும் எண்களின் கூடுதல் காண்க.

i. 216, 3422, 4019, 497

ii. 1002, 2347, 1976, 2005, 2007

iii. 1978, 1965, 2704, 473

**ஆ.** பின்வரும் நான்கு உண்டிகளில் உள்ள தொகைகளின் கூடுதல் காண்க.

₹ 978 ₹ 3796 ₹ 2374 ₹ 1957

**இ.** கூடுதல் காண்க: 1215 + 2367 + 1673 + 3120 = ____________

அ) 8585 ஆ) 8225 இ) 8375 ஈ) 8285

**ஈ.** கூடுதல் காண்க: 2076 + 276 + 2974 + 1751 = ____________

அ) 9561 ஆ) 7077 இ) 7377 ஈ) இவற்றில் ஏதுமில்லை

**உ.** ஐந்து நூறுகள் மற்றும் பதினைந்து பத்துகளின் கூடுதல் என்ன?

அ) 650 ஆ) 550 இ) 5150 ஈ) 6150

**ஊ.** மிகப்பெரிய 3 இலக்க எண்ணையும் மற்றும் மிகச் சிறிய 4 இலக்க எண்ணையும் கூட்டினால் கிடைக்கும் கூட்டற் பலன் என்ன?

அ) 1999 ஆ) 1099 இ) 1990 ஈ) 9999

**எ.** 9999 + 1 = _________

அ) 10,000 ஆ) 1000 இ) 1001 ஈ) 10001

ஏ. ஒரு கிராமத்தில் உள்ள, ஆண்களின் எண்ணிக்கை 4154 மற்றும் பெண்களின் எண்ணிக்கை 4221 எனில், அக்கிராமத்தின் மொத்த மக்கள் தொகையைக் காண்க.

ஐ. ஒரு குளிர்சாதன பெட்டியின் விலை ₹ 6543 மற்றும் டிவிடியின் விலை ₹ 3412 எனில், அப்பொருள்களின் மொத்த விலை என்ன?

## 2.3.2 கழித்தல் (இனமாற்றமின்றி)

**உங்களுக்குத் தெரியுமா?**

ஒரு எண்ணிலிருந்து பூஜ்ஜியத்தை கழித்தால் கிடைக்கும் வேறுபாடு/வித்தியாசமானது அந்த எண்ணே ஆகும்.

1. ஓர் எண்ணையும் அதே எண்ணையும் கழித்தால் கிடைக்கும் வேறுபாடு/ வித்தியாசமானது 0 ஆகும்

**எடுத்துக்காட்டுகள்**

1)

| | ஆ | நூ | ப | ஒ |
|---|---|---|---|---|
| | 9 | 8 | 6 | 5 |
| − | 2 | 3 | 3 | 4 |
| | 7 | 5 | 3 | 1 |

இனமாற்றமின்றி கழித்தல்

படி 1: ஒன்றுகளைக் கழிக்கவும்

படி 2: பத்துகளைக் கழிக்கவும்

படி 3: நூறுகளைக் கழிக்கவும்

படி 4: ஆயிரங்களைக் கழிக்கவும்

2) ரோஜாவின் மாத வருமானம் ₹ 8950. அவர் ₹ 6750 ஐ செலவு செய்துவிட்டு மீத தொகையை சேமிக்கிறார் எனில் அவர் சேமித்த தொகை எவ்வளவு?

**தீர்வு:**

| | | | ஆ | நூ | ப | ஒ |
|---|---|---|---|---|---|---|
| மாத வருமானம் | = | | 8 | 9 | 5 | 0 |
| செலவிட்ட தொகை | = | − | 6 | 7 | 5 | 0 |
| சேமித்த தொகை | = | | 2 | 2 | 0 | 0 |

எனவே, ரோஜா சேமித்த தொகை ₹ 2200 ஆகும்.

## பயிற்சி 2.8

அ. வேறுபாடு காண்க

i.
| | | | | |
|---|---|---|---|---|
| | 9 | 7 | 6 | 4 |
| − | 3 | 4 | 2 | 3 |
| | | | | |

ii.
| | | | | |
|---|---|---|---|---|
| | 7 | 9 | 8 | 6 |
| − | 4 | 5 | 2 | 4 |
| | | | | |

iii.
| | | | | |
|---|---|---|---|---|
| | 4 | 7 | 8 | 5 |
| − | 2 | 4 | 6 | 2 |
| | | | | |



4th_Unit_02_Numbers_Term 1-TM.indd 35 26-02-2020 01:32:26 PM

## 2.3.3 கழித்தல் (இனமாற்றத்துடன் கழித்தல்)

### எடுத்துக்காட்டுகள்

1. 5657 லிருந்து 3285 ஐ கழிக்கவும்

படி 1:

எண்களை கீழ்கண்டவாறு நிரல்களில் வரிசைப்படுத்துக

| | ஆ | நூ | ப | ஒ |
|---|---|---|---|---|
| | 5 | 6 | 5 | 7 |
| – | 3 | 2 | 8 | 5 |
| | | | | |

படி 2:

ஒவ்வொரு நிரலாக கழிக்கவும்

| | ஆ | நூ | ப | ஒ |
|---|---|---|---|---|
| | | 5 | 15 | |
| | 5 | ~~6~~ | ~~5~~ | 7 |
| – | 3 | 2 | 8 | 5 |
| | 2 | 3 | 7 | 2 |

**படி 1:** 7 ஒன்றுகளில் இருந்து 5 ஒன்றுகளை கழிக்க 2 ஒன்றுகள் கிடைக்கும்.

**படி 2:** 8 பத்துக்களை 5 பத்துகளில் இருந்து கழிக்க இயலாது ஆகவே ஒரு நூறினை பத்தாம் நிரலுக்கு இனமாற்றி கழிக்க வேண்டும்.

**படி 3:** 6 நூறுகளை = 5 நூறுகள் +
1 நூறு (1 நூறு இனமாற்றி பத்தாம் இடத்திற்கு) எனப் பிரிக்கலாம்
1 நூறு = 10 பத்துகள்
ஆக 10 பத்துகள் + 5 பத்துகள் = 15 பத்துகள்

**படி 4:** தற்போது 5 நூறிலிருந்து 2 நூறுகளைக் கழிக்கவும்

**படி 5:** பிறகு 5 ஆயிரத்திலிருந்து 3 ஆயிரத்தைக் கழிக்கவும்

**5657 – 3285 = 2372**

2. இரு எண்களின் கூடுதல் 4204. ஒரு எண் 1207 எனில், மற்றொரு எண்ணை காண்க.

**தீர்வு:**

இரண்டு எண்களில் கூடுதல் = 4204

ஒரு எண் = 1207

மற்றொரு எண் = **2997**

| | ஆ | நூ | ப | ஒ |
|---|---|---|---|---|
| | 3 | 11 | 9 ~~10~~ | 14 |
| | ~~4~~ | 1 ~~2~~ | ~~0~~ | 4 |
| – | 1 | 2 | 0 | 7 |
| | 2 | 9 | 9 | 7 |



4th_Unit_02_Numbers_Term 1-TM.indd 36 26-02-2020 01:32:26 PM

## பயிற்சி 2.9

SVXPZ5

**அ.** கழிக்க

i.

| | ஆ | நூ | ப | ஒ |
|---|---|---|---|---|
| | 3 | 4 | 4 | 5 |
| − | 1 | 3 | 4 | 8 |
| | | | | |

ii.

| | ஆ | நூ | ப | ஒ |
|---|---|---|---|---|
| | 4 | 9 | 6 | 5 |
| − | 2 | 4 | 4 | 6 |
| | | | | |

iii.

| | ஆ | நூ | ப | ஒ |
|---|---|---|---|---|
| | 6 | 5 | 7 | 0 |
| − | 3 | 3 | 9 | 7 |
| | | | | |

iv.

| | ஆ | நூ | ப | ஒ |
|---|---|---|---|---|
| | 8 | 9 | 5 | 3 |
| − | 5 | 9 | 6 | 4 |
| | | | | |

**ஆ.** கொடுக்கப்பட்ட எண்களின் வேறுபாட்டை காண்க.

i. 4352 மற்றும் 5020

ii. 1438 மற்றும் 3370

iii. 2526 மற்றும் 8431

iv. 3361 மற்றும் 9000

**இ.** கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு விடையளி:

i. இரு எண்களின் கூடுதல் 7036. ஒரு எண் 3168 எனில், மற்றொரு எண்ணை காண்க.

ii. ஒருவர் தனது வங்கிக் கணக்கில் ரூ 9200 வைத்திருந்தார். அவர் ரூ 2756 ஐ எடுத்து விட்டார் எனில், அவரது கணக்கில் உள்ள மீதித் தொகை என்ன?

**ஈ.** கீழே உள்ள விவரங்களை கொண்டு கழித்தல் கணக்குகளை உருவாக்குக.

i. 1997 – 1968

ii.



iii.




## செயல்பாடு

**எண் புதிர்**

கழித்தல் கணக்குகளை தீர்த்து வேறுபாட்டினை கண்டறிக உங்களுக்காக ஒன்று விடை அளிக்கப்பட்டுள்ளது.

| | ஆ | நூ | ப | ஒ |
|---|---|---|---|---|
| | 8 | 11 | 6 | 16 |
| | ~~9~~ | ~~1~~ | ~~7~~ | ~~6~~ |
| (−) | 3 | 5 | 5 | 8 |
| | 5 | 6 | 1 | 8 |

| | ஆ | நூ | ப | ஒ |
|---|---|---|---|---|
| | 2 | 3 | 5 | 3 |
| − | 1 | 9 | 0 | 1 |
| | | | | |

| | ஆ | நூ | ப | ஒ |
|---|---|---|---|---|
| | 1 | 2 | 2 | 8 |
| − | | 2 | 8 | 6 |
| | | | | |

| | ஆ | நூ | ப | ஒ |
|---|---|---|---|---|
| | 9 | 6 | 3 | 0 |
| − | 1 | 5 | 9 | 0 |
| | | | | |

| | ஆ | நூ | ப | ஒ |
|---|---|---|---|---|
| | 4 | 8 | 0 | 0 |
| − | 3 | 1 | 6 | 2 |
| | 1 | 6 | 3 | 8 |

| | ஆ | நூ | ப | ஒ |
|---|---|---|---|---|
| | 6 | 5 | 8 | 9 |
| − | 5 | 8 | 0 | 6 |
| | | | | |

| | ஆ | நூ | ப | ஒ |
|---|---|---|---|---|
| | 9 | 8 | 5 | 4 |
| − | 3 | 6 | 4 | 4 |
| | | | | |

| | ஆ | நூ | ப | ஒ |
|---|---|---|---|---|
| | 1 | 8 | 6 | 9 |
| − | 1 | 3 | 7 | 9 |
| | | | | |

| | ஆ | நூ | ப | ஒ |
|---|---|---|---|---|
| | 5 | 4 | 5 | 6 |
| − | 1 | 3 | 2 | 5 |
| | | | | |

| | ஆ | நூ | ப | ஒ |
|---|---|---|---|---|
| | 9 | 2 | 2 | 3 |
| − | 3 | 8 | 9 | 9 |
| | | | | |



4th_Unit_02_Numbers_Term 1-TM.indd 38 26-02-2020 01:32:27 PM